1970 செப்டம்பர் 5]

வரத்தில் மீன் தோணித்துறை ஒன்று கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

* 240 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the slipway at Fishing Harbour at Tuticorin is to be constructed now; and

(b) the stage at which the matter stands at present?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கப்பல் கட்டும் துறைச் சாய்தளம் (Slipway) கட்டு வதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகளை தலைமைப்பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை வரவழைத்துள்ளார்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத் திற்கு என்ன செலவாகும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருக் கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: 6.2 லட்ச ரூபாய்.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, இந்த ஃபிஷிங் ஹார்பர் கட்டுவதுபற்றி அங்குள்ள மீனவர்கள் அந்த ஹார்பரைக் கொஞ்சம் தள்ளி வைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பி யுள்ளார்களா? ஆம் எனில், அதுபற்றிய பரிசீலனை முடிந்துள்ளதா? எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அவர்களது கோரிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வேறு இடம் அவர்களுக்குப் பார்த்துக் கொடுத்தும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. வேறு இடம் பார்த்துக்கொடுப்பதுபற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

பருத்தி சாகுபடியாளர்களுக்கு கடன்

*241. வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலூக்காவில் 1969-ம் ஆண்டில் பருத்தி சாகுபடியாளர்களுக்கு உரக்கடன் காலாகாலத்தில் அளிக்கப்பட வில்லை என்பது உண்மையா?

(இ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) 1969–70-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில் பட்டியை மையப்பணியிடமாக கொண்டு தீவிர பருத்தி சாகுபடி திட்டத்தைச் செயலாக்க 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத

இறுதியில் அரசு உத்திரவிட்டது. எனவே இப்புதுத் திட்டம் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்துதான் செயல்பட்டு வருகின்றது. ஆகையால் பருத்திச் சாகுபடி காலத்திற்கு முன் செய்யப்படவேண்டிய பண்ணை திட்டங்கள் தயாரித்தல், கடன் வழங்க சிபாரிசு செய்தல் முதலியவற்றை முன்கூட்டியே செய்ய இயலவில்லை. இதன் காரண மாகக் கூட்டுறவு சங்கங்களில் இருந்து சில விவசாயிகள் திட்ட ஆரம்பக் கட்டத்தில் கடன்பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, அந்த விதமான குறைபாடுகள் இனி ஏற்படாமல் இருப்பதற்கான குறிப்புகளை அந்த அந்த அதிகாரிகளுக்குத் தற்போது அரசு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முன்பே அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அந்தப் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு அந்தந்த நகரத்தில் உரக் கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதன் காரணமாக அவர்கள் அதிக விலை கொடுத்து, வேறொரு பக்கம் கடன் வாங்கி, உரம் வாங்கிப் பருத்திச் சாகுபடி செய்யவேண்டிய அவசியம் இருப்பதால் அவர் களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. உரக் கடன்கள் அவர்களுக்குச் சீக்கிரமாக அளிக்க அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏதாவது உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது முதன் முதலாக நாம் ஆரம்பித்த திட்டம். இது கோயில்பட்டியில் ஆரம் பிக்கப்பட்டது. சாதாரணமாக, பருத்தி விதைக்கின்ற காலம் செப்டம்பர்—அக்டோபர் மாதம்தான். நாம் ஒப்பளிப்பு அளித்தது 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில். எனவே, உடனடியாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது; கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களையெல்லாம் அனுப்பிவைப்பது ஆகிய இப்படிப்பட்ட அடிப் படைப் பணியில் கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. ஆனால், இந்த ஆண்டு கிட்டத்தட்ட நான்கு இலட்ச ரூபாய் நாம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்து தொகை ஒதுக்கி வைத்திருந்ததில், 3 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் அந்தத் திட்டத்தின்மூலம் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

Price of Sugar

* 242 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Government is aware of the new Zones fixed by the Union Government for fixing prices of sugar;

(*b*) whether the State Government has been consulted in this regard; and

(*c*) if so, the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (*a*) Yes.

(b) No.